**நவம்பர் – 29**

# TNPSC துளிகள்

- மதராஸின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் துறைமுகங்களுக்கான இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட கப்பல் போக்குவரத்து மேலாண்மை அமைப்பை (VTMS) உருவாக்கி நிறுவியுள்ளனர்.
  - VTMS என்பது கப்பல்களின் நிலைகள், வானிலை ஆபத்து முன் எச்சரிக்கைகள் மற்றும் துறைமுகம் அல்லது நீர்வழிகளுக்குள் போக்குவரத்தை நிர்வகிப்பதற்கான ஒரு மென்பொருளாகும்.
- டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கரின் மார்பளவுச் சிலையானது சமீபத்தில் பாரிஸில் உள்ள யுனெஸ்கோ தலைமையகத்தில் திறக்கப்பட்டது.
- 141 வயதான கிராமா எனும் கலபகோஸ் இராட்சத ஆமை சமீபத்தில் இறந்தது.
  - இது கலபகோஸ் ஆமைகளின் 15 கிளையினங்களில் ஒன்றாகும் (கலபகோஸ் தீவுகள் - ஈக்வடாரில் உள்ள தீவுக்கூட்டம்).
- அமெரிக்காவின் டெக்சாஸின் ஆர்லிங்டனில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டின் உலகின் வலிமையான பெண்மணி என்ற பட்டத்தை ஜம்மி புக்கர் வென்றார்.
- இந்திய நாடானது, இரண்டாவது பிராந்திய அணுகல் வாய்ப்பு நிறைந்த டிஜிட்டல் சுகாதார உச்சி மாநாட்டினை (RODHS-2025) புது டெல்லியில் நடத்தியது.
- இந்தியப் பிரதமர் தெலுங்கானாவின் ஐதராபாத்தில் அமைக்கப்பட்டுள்ள சஃப்ரான் விமான இயந்திரச் சேவைகள் இந்தியா (SAESI) மையத்தினைத் திறந்து வைத்தார்.
- தெற்கு கோவா மாவட்டத்தில் உள்ள ஸ்ரீ சமஸ்தானம் கோகர்ண ஜீவோட்டம் மடத்தில் அமைக்கப்பட்டுள்ள 77 அடி உயரமுள்ள இராமரின் வெண்கலச் சிலையைப் பிரதமர் திறந்து வைத்தார்.
- 5வது கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் தொடங்கின.
- நவம்பர் 24 ஆம் தேதியன்று கொண்டாடப் படும் 2வது ஐ.நா. உலக ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் தினம் ஆனது துணிவினைக் கொண்டாடுவதுடன், மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு ஆதரவளிக்க அழைப்பு விடுக்கிறது.
  - 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "From Words to Action: A world fit for Conjoined Twins and Children with Disabilities" என்பதாகும்.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டில் பதிவான உயிழந்த உறுப்புக் கொடையாளர்கள் 2024

- 2024 ஆம் ஆண்டில் இதுவரை தமிழ்நாட்டில் 240 உயிழந்த உறுப்பு கொடையாளர்கள் பதிவு செய்யப் பட்டுள்ளனர்.
- 2024 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் 268 உயிரிழந்த உறுப்பு கொடையாளர்கள் பதிவு செய்துள்ளனர் என்பதோடு இது இம்மாநிலத்தில் இது வரை பதிவாகாத அதிகபட்சம் ஆகும்.
- 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் மொத்தம் 1,128 உயிரிழந்த உறுப்பு கொடையாளர்கள் இருந்தனர்.
- உயிரிழந்த உறுப்பு கொடையாளர்களில் தமிழ்நாடு (268), தெலுங்கானா (188),

மகாராஷ்டிரா (172), கர்நாடகா (162), மற்றும் குஜராத் (119) ஆகிய ஐந்து மாநிலங்கள் 80% பங்களித்துள்ளன.

- 2024 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் 1,446 உறுப்புகள் மற்றும் திசுக்கள் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டன.
- தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையம் (TRANSTAN) ஆனது உறுப்பு தானத் திட்டத்தை நிர்வகிக்கிறது மற்றும் வெளிப்படையான உறுப்பு ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பேணுகிறது.




## ஈரோட்டில் உள்ள பொல்லானின் நினைவுச் சின்னம்

- ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியில் உள்ள ஜெயராமபுரத்தில் 18 ஆம் நூற்றாண்டின் சுதந்திரப் போராட்ட வீரர் பொல்லானின் முழு அளவிலான சிலையைக் கொண்ட நினைவுச்சின்னத்தை தமிழக முதல்வர் M.K. ஸ்டாலின் திறந்து வைத்தார்.
- பொல்லான் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடிய சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் நம்பகமான தளபதியாக இருந்தார்.
- பொல்லான் தீரனின் இராணுவ மற்றும் உளவுப் படைகளில் பணியாற்றினார்.
- 1801 ஆம் ஆண்டில் பவானியில் காவிரி ஆற்றங்கரையில் நடந்த போர், 1802 ஆம் ஆண்டில் சென்னிமலைப் போர், மற்றும் 1803 ஆம் ஆண்டில் அரச்சலூர் போர் ஆகிய மூன்று போர்களில் ஆங்கிலேயர்களைத் தோற்கடிக்க தீரன் சின்னமலைக்கு அவர் உதவினார்.
- ஓடாநிலை கோட்டையில் தீரன் சின்னமலையைக் கைப்பற்ற கர்னல் ஹாரிஸ் திட்டமிட்டார்.
- இருப்பினும், பொல்லான் முன்னதாகவே தீரனுக்குத் தகவலைத் தெரிவித்து கோட்டையிலிருந்து தப்பிச் செல்லுமாறு அவரை அறிவுறுத்தினார்.
- பொல்லானின் உளவுத் துறையில் அவரது ஈடுபாட்டைக் கண்டறிந்த பிறகு, கர்னல் ஹாரிஸ் அவரைக் கைது செய்ய உத்தரவிட்டார்.

- நீண்ட தேடலுக்குப் பிறகு, 1805 ஆம் ஆண்டு தமிழ் மாத ஆடி முதல் நாளில் ஓடாநிலை கோட்டைக்கு அருகிலுள்ள ஜெயராமபுரத்தில் கர்னல் ஹாரிஸ் மற்றும் பிரிட்டிஷ் இராணுவத்தால் அவர் சுட்டுக் கொல்லப் பட்டார்.




# தேசியச் செய்திகள்

## அருமண் நிரந்தர காந்த உற்பத்தி




- உருக்கி இணைக்கப்பட்ட அருமண் நிரந்தர காந்தங்களை (REPM - Rare Earth Permanent Magnets) உருவாக்குவதற்கான 7,280 கோடி ரூபாய் திட்டத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- முழுமையான REPM சூழல் அமைப்பை உருவாக்க இந்தியாவில் மேற்கொள்ளப்படும் இது போன்ற முதல் திட்டம் இதுவாகும்.
- இந்தத் திட்டம் ஆனது ஆண்டிற்கு 6,000 மெட்ரிக் டன் (MTPA) அளவிலான ஒருங்கிணைந்த REPM உற்பத்தி திறனை நிறுவும்.

- REPM ஆனது மின்சார வாகனங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மின்னணுவியல், விண்வெளி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் வலுவான காந்தங்கள் ஆகும்.
- இந்தத் திட்டம் விற்பனை ஊக்குவிப்புத் திட்டத்தில் 6,450 கோடி ரூபாயையும் மூலதன மானியமாக 750 கோடி ரூபாயையும் வழங்குகிறது.
- இந்தத் திட்டம் 7 ஆண்டுகளுக்கு செயலில் இருக்கும் என்பதோடு மேலும் ஆத்மநிர்பர் பாரத் (தன்னிறைவு கொண்ட இந்தியா) மற்றும் 2070 ஆம் ஆண்டில் நிகரச் சுழிய உமிழ்வு என்ற இலக்கை ஆதரிக்கிறது.

## பாரத் NCAP 2.0




- பாரத் NCAP (புதிய கார் மதிப்பீட்டுத் திட்டம்) 2.0 என்பது இந்தியாவில் விற்கப்படும் கார்களுக்கான திருத்தப்பட்ட வாகனப் பாதுகாப்பு மதிப்பீட்டுத் திட்டமாகும்.
- இது 2023 ஆம் ஆண்டு பாரத் NCAP வழிகாட்டுதல்களைப் புதுப்பிப்பதற்காக சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகத்தால் (MoRTH) தொடங்கப் பட்டது.
- சோதனை மற்றும் சான்றிதழ் வழங்கீடு ஆனது புனேவில் உள்ள மத்திய சாலைப் போக்குவரத்து நிறுவனத்தினால் (CIRT) மேற்கொள்ளப்படுகிறது.
- இந்தத் திட்டம் விபத்தில் ஏற்படும் மோதல் காப்புத் தகுதி, விபத்து-தவிர்ப்பு தொழில் நுட்பங்கள் மற்றும் பாதசாரிகள் / பாதிக்கப்படக்கூடிய சாலைப் பயனர் பாதுகாப்பு ஆகியவற்றினை மதிப்பிடுகிறது.
- இதன் ஐந்து மதிப்பீட்டுக் கூறுகளில் பாதுகாப்பான வாகனம் ஓட்டுதல், விபத்து தவிர்ப்பு, மோதலில் பாதுகாப்பு, பாதிக்கப்படக் கூடிய சாலை பயனர் பாதுகாப்பு மற்றும் விபத்துக்குப் பிந்தைய பாதுகாப்பு ஆகியவை அடங்கும்.
- இந்தத் திட்டம் பாதசாரிகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதையும், 2030 ஆம் ஆண்டிற்குள் இந்தியா சாலை விபத்து சார்ந்த இறப்புகளை 50% குறைக்க உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## நயி செட்னா 4.0

- "நயி செட்னா - மாற்றத்திற்கான முன்னெடுப்பு" என்ற 4வது பெண்கள்

அதிகாரமளிப்புப் பிரச்சாரம் தொடங்கப்பட்டது.

- இந்தப் பிரச்சாரம் கிராமப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் DAY-NRLM (தீன்தயால் அந்த்யோதயா யோஜனா - தேசியக் கிராமப்புற வாழ்வாதாரத் திட்டம்) திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இது 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 23 ஆம் தேதி வரையில், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிலும் செயல்படும்.
- இந்தப் பிரச்சாரம் வன்முறை இல்லாத கிராமங்கள், பெண்களுக்குப் பாதுகாப்பான இயக்கம், போதைப்பொருள் துஷ்பிரயோகத்திற்கு எதிரான விழிப்புணர்வு மற்றும் பெண்களின் பொருளாதாரப் பங்களிப்புகளை அங்கீகரித்தல் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது.




## மூலதன ஆதாயக் கணக்குகள் (இரண்டாவது திருத்தம்) திட்டம், 2025




- இந்தத் திருத்தம், அதன் செயல்முறைகளை நவீனமயமாக்கவும் டிஜிட்டல் மயமாக்கவும் 1988 ஆம் ஆண்டின் மூலதன ஆதாயக் கணக்குத் திட்டத்தை (CGAS) புதுப்பிக்கிறது.
- இது 54GA பிரிவு (தொழிற்சாலைகளை சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு மாற்றுவதன் மூலதன ஆதாயங்கள்) மற்றும் 54, 54B, 54D, 54F, 54G மற்றும் 54GB (மூலதன ஆதாய விலக்குப் பிரிவுகள்) ஆகிய பிரிவுகளைச் சேர்க்கிறது.
- வைப்பு அலுவலகத்தின் வரையறையில் தற்போது அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளும், 1949 ஆம் ஆண்டு வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தால்

அறிவிக்கப்பட்ட எந்தவொரு வங்கியும் அடங்கும்.

- UPI, உடனடி பண வழங்கீட்டுச் சேவை (IMPS), தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் (NEFT), நிகழ்நேர பெருந்திரள் தீர்வு பரிமாற்ற வசதி (RTGS), இணைய வங்கி மற்றும் கடன் / பற்று அட்டைகள் போன்ற புதிய டிஜிட்டல் பண வழங்கீட்டு முறைகள் தற்போது அனுமதிக்கப்படுகின்றன.
- மின்னணு கணக்குப் புத்தகங்கள் மற்றும் டிஜிட்டல் கணக்கு அறிக்கைகள் ஆனது வைப்புத் தொகை, பணம் திரும்பப் பெறுதல் மற்றும் பரிமாற்றங்களுக்கு அனுமதிக்கப் படுகின்றன.
- 2027 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல், கணக்கு மூடல் ஆனது டிஜிட்டல் வழி கையொப்பம் அல்லது மின்னணுச் சரிபார்ப்புக் குறியீட்டை (EVC) பயன்படுத்தி இயங்கலையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

# சர்வதேசச் செய்திகள்

## G20 ஜோகன்னஸ்பர்க் உச்சி மாநாடு 2025




- ஆப்பிரிக்கக் கண்டத்தில் முதன்முறையாக தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க்கில் 20வது G20 தலைவர்கள் உச்சி மாநாடு நடைபெற்றது.
- தென்னாப்பிரிக்க அதிபருடனான அரசியல் கருத்து வேறுபாடுகள் காரணமாக அமெரிக்க அதிபர் இந்த உச்சிமாநாட்டைப் புறக்கணித்தார்.
- உலகத் தலைவர்கள் ஒருங்கிணைந்திருத்தல் மற்றும் பலதரப்பு ஒத்துழைப்பை வலியுறுத்துகின்ற உபுண்டு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு பிரகடனத்தை இங்கு ஏற்றுக் கொண்டனர்.
- சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிர்வாகக் குழுவில் 25வது இடம் ஆனது ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிக்காக உருவாக்கப்பட்டது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 300 மில்லியன் ஆப்பிரிக்கர்களுக்கு மின்சாரம் வழங்குவதற்காக இந்த உச்சி மாநாடு 'திட்டம் 300' என்ற திட்டத்தினை அறிமுகப் படுத்தியது.
- நிலையான விநியோகச் சங்கிலிகளை உறுதி செய்வதற்கும் உள்ளூர்ச்

செயலாக்கத்தை ஊக்குவிப்பதற்கும் G20 முக்கியக் கனிமக் கட்டமைப்பு அறிமுகப் படுத்தப் பட்டது.

- உணவுக்கான உரிமையை மீண்டும் உறுதிப்படுத்திய இந்த உச்சி மாநாடு பட்டினியை ஒரு போர் ஆயுதமாக பயன்படுத்துவதைக் கண்டித்தது.
- தொழில்நுட்பத்தைப் பகிர்ந்து கொள்ளவும் நெறிமுறை சார்ந்த AI பயன்பாட்டை உறுதி செய்யவும் ஆப்பிரிக்காவுக்கான AI முன்னெடுப்பு தொடங்கப்பட்டது.
- இளையோர் வேலைவாய்ப்பு மற்றும் பாலின சமத்துவ இலக்குகள் நிர்ணயிக்கப் பட்டன: 2030 ஆம் ஆண்டிற்குள் NEET (வேலைவாய்ப்பு, கல்வி அல்லது பயிற்சியைச் சார்ந்தது அல்ல) 5% குறைத்தல் மற்றும் தொழிலாளர் பங்கேற்பில் பாலின இடைவெளியை 25% குறைத்தல்.
- பிரதிநிதித்துவம் குறைவாக உள்ள பகுதிகளைச் சிறப்பாகப் பிரதிநிதித்துவப்படுத்த ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் சீர்திருத்தத்தினை மேற்கொள்ள இந்த உச்சி மாநாடு அழைப்பு விடுத்தது.

## தன்பாலின திருமண அங்கீகாரம் - EU நீதிமன்றம்




- ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) அனைத்து உறுப்பினர் நாடுகளிலும் தன் பாலினத் திருமணங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று EU நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- ஜெர்மனியில் நடைபெற்ற இரண்டு போலந்து குடிமக்களுக்கு இடையேயான திருமணத்தைப் பதிவு செய்ய போலந்து மறுத்ததை அடுத்து இந்தத் தீர்ப்பு வந்தது.
- இந்த அங்கீகாரத்தை மறுப்பது இடம் பெயர்வதற்கான சுதந்திரத்தையும் தனிப்பட்ட மற்றும் குடும்ப வாழ்க்கைக்கான உரிமையையும் மீறுகிறது.
- EU குடிமக்கள் ஒரு இடம் பெயர்ந்து குடியேறிய நாட்டிலும் மற்றும் வீடு திரும்பியதும் "வழக்கமான குடும்ப வாழ்க்கையை" தொடரலாம்.
- வெளிநாட்டுத் திருமணங்களை அங்கீகரிக்கும் போது உறுப்பினர் நாடுகள் தன் பாலின இணையர்களுக்கு எதிராக பாகுபாடு காட்ட முடியாது.

## போலியோ இல்லாத நாடு – இந்தோனேசியா

- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது இந்தோனேசியாவை போலியோவின் இரண்டாம் வகை வைரஸ் பாதிப்பிலிருந்து விடுபட்ட நாடாக அறிவித்துள்ளது.

- போலியோ வைரஸ் என்பது பக்கவாதத்தையும் சில சமயங்களில் மரணத்தையும் ஏற்படுத்துகின்ற, பெரும்பாலும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பாதிக்கின்ற மிகவும் தொற்று மிக்க வைரஸ் ஆகும்.
- 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் குழந்தைகளிலோ அல்லது சுற்றுச்சூழலிலோ போலியோ வைரஸ் கண்டறியப்படவில்லை.
- இந்தத் தொற்று 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஆச்சேவில் தொடங்கி, மேலும் பல மாகாணங்களுக்குப் பரவியது, 2024 ஆம் ஆண்டு ஜூன் 27 ஆம் தேதியன்று கடைசி பாதிப்பு பதிவானது.
- 2023 ஆம் ஆண்டில் 63% ஆக இருந்த செயலற்ற போலியோ தடுப்பூசியின் (IPV) இரண்டாவது தவணையைப் பெறும் குழந்தைகள் எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டில் 73% ஆக உயர்ந்ததுடன் தடுப்பூசி வழங்கீடு மேம்பட்டது.
- இந்தோனேசியா DPT-HB-Hib (டிஃப்தீரியா, கக்குவான் இருமல், இரண ஜன்னி, ஹெபடைடிஸ் பி, ஹீமோபிலஸ் இன்ஃப்ளுயன்ஸா வகை B) மற்றும் IPV (செயலற்றப் போலியோ தடுப்பூசி) ஆகியவற்றை இணைக்கும் ஒரே தவணையில் ஆறு நோய்களுக்கு எதிராகப் பாதுகாப்பை வழங்குகின்ற ஹெக்ஸாவலன்ட் (ஆறு இணை திறன் கொண்ட) தடுப்பூசியை அறிமுகப்படுத்தியது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கவி-யுனிசெஃப் மலேரியா தடுப்பூசி ஒப்பந்தம்

- கவி மற்றும் யுனிசெஃப் (ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம்) ஆகியவை R21/Matrix-M மலேரியா தடுப்பூசிகளை மேலும் அணுகக் கூடியதாக மாற்றுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- 90 மில்லியன் டாலர் வரையில் சேமிக்கும் இந்த ஒப்பந்தம் மூலம், ஐந்து ஆண்டுகளில் கிட்டத்தட்ட 7 மில்லியன் குழந்தைகளுக்கு 30 மில்லியனுக்கும் அதிகமான கூடுதல் தவணைகளை வழங்கப்பட உள்ளது.
- WHO ஆனது அதிக ஆபத்தில் உள்ள குழந்தைகளில் மலேரியா பாதிப்புகளை 50–75% குறைக்கின்ற R21/Matrix-M மற்றும் RTS, S/AS01 ஆகிய இரண்டு தடுப்பூசிகளை முன் கூட்டியே தகுதிப் படுத்தியது.

- உலகளாவிய மலேரியா பாதிப்பில் 70% பங்கினை உள்ளடக்கியுள்ள 24 ஆப்பிரிக்க நாடுகளில் கவியின் மலேரியா தடுப்பூசித் திட்டத்தின் மூலம் 40 மில்லியனுக்கும் அதிகமான தவணைகள் வழங்கப்பட்டுள்ளன.




# மாநிலச் செய்திகள்

## அசாம் பலதாரத் திருமண எதிர்ப்பு மசோதா 2025





- அசாம் சட்டமன்றம் ஆனது 2025 ஆம் ஆண்டு பலதார திருமணத் தடை மசோதாவினை தாக்கல் செய்தது.
- இந்த மசோதா பலதார மணத்தை ஏழு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை என்பதோடு மேலும் ஏற்கனவே நடந்த திருமணத்தை மறைத்தால் 10 ஆண்டுகள் வரை

சிறைத் தண்டனை வழங்கப்படுகின்ற மற்றும் அபராதத்துடன் கூடிய குற்றமாக்குகிறது.

- ❖ மீண்டும் மீண்டும் குற்றமிழைக்கும் குற்றவாளிகளுக்கு இந்தத் தண்டனை இரட்டிப்பாக வழங்கப்படும்.
- ❖ இந்தச் சட்டம் அசாமில் வசிப்பவர்கள், அசாமிற்கு வெளியே திருமணம் செய்பவர்கள் மற்றும் அந்த மாநிலத்தில் சொத்து அல்லது சலுகைகளைக் கொண்டுள்ள குடியிருப்பாளர்கள் அல்லாதவர்களுக்குப் பொருந்தும்.
- ❖ அரசியலமைப்பின் 342வது சரத்தின் கீழ் ஆறாவது அட்டவணை பகுதிகள் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கு இந்த மசோதா விலக்கு அளிக்கிறது.
- ❖ பலதார மணத்தில் பங்கேற்கும் பாதிரியார்கள், கிராமத் தலைவர்கள், பெற்றோர்கள் மற்றும் சட்டப்பூர்வப் பாதுகாவலர்கள் 1.5 லட்சம் ரூபாய் வரை அபராதத்துடன் தண்டிக்கப் படுவர்.

## அபுஜ்மதியா பழங்குடியினர்




- ❖ அபுஜ்மதியா பழங்குடியினரின் உறுப்பினர்கள் பஸ்தார் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் இணைகிறார்கள்.
- ❖ பஸ்தார் ஒலிம்பிக் போட்டிகள் சத்தீஸ்கரில் நடைபெறுகின்றன.
- ❖ அபுஜ்மதியா பழங்குடியினர் மத்திய இந்தியாவின் கோண்ட் பழங்குடியினரின் ஒரு துணைக் குழுவினர் ஆவர்ம்.
- ❖ அவர்கள் திராவிடத்திற்கு முந்தைய அல்லது புரோட்டோ-ஆஸ்திரலாய்டு இனக் குழுவைச் சேர்ந்தவர்கள், மேலும் அவர்கள் வலுவான உடல் அமைப்பைக் கொண்டு உள்ளனர்.
- ❖ அவர்கள் சத்தீஸ்கரின் நாராயண்பூர், பிஜாப்பூர் மற்றும் தண்டேவாடா மாவட்டங்களில் பரவியுள்ள அபுஜ்மர் காடுகளில் வாழ்கின்றனர்.
- ❖ அவர்கள் சத்தீஸ்கரில் உள்ள 7 எளிதில் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினர்

குழுக்களில் (PVTGs) ஒருவராவர்.

- அவர்கள் திராவிட குடும்பத்தைச் சேர்ந்த கோண்டி மொழியின் உள்ளூர் வடிவமான மடி என்ற மொழியைப் பேசுகிறார்கள்.
- அவர்களின் முக்கியத் தெய்வங்களில் புத்ததேவர், தாக்கூர் தேவ், புத்திமை மற்றும் லிங்கோபன் ஆகியோர் அடங்குவர்.
- அவர்கள் சூரியன், சந்திரன், ஆறுகள், மலைகள் மற்றும் பூமி போன்ற இயற்கையை வணங்குகிறார்கள்.
- அவர்களின் முக்கியப் பண்டிகைகள் போலா, காகாசர் மற்றும் பாண்டும் ஆகும் என்பதோடு மேலும் அவர்கள் கக்சர், கெடி மற்றும் ரிலோ போன்ற நடனங்களை ஆடி மகிழ்கின்றனர்.
- அவர்களின் சமூகம் குல (கோத்ரம்) பிரிவுகளைப் பின்பற்றுகின்ற தந்தை வழி சமூகம் சார்ந்தது என்பதோடு மேலும் ஒரு மஞ்சி (தலைவர்) என்பவர் தலைமையிலான ஒரு பாரம்பரியப் பஞ்சாயத்தினால் அது வழி நடத்தப்படுகிறது.

## ‘ரைட்டன்னா - மீ கோசம்’ முன்னெடுப்பு





- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது 2025 ஆம் ஆண்டு நவம்பர் 24 முதல் 29 ஆம் தேதி வரை ‘ரைட்டன்னா - மீ கோசம்’ என்ற ஒரு வார கால விவசாயி விழிப்புணர்வு நிகழ்ச்சியினை நடத்துகிறது.
- இந்த இயக்கத்தில், நவீனச் சாகுபடி முறைகள் குறித்து விவசாயிகளுக்குக் கல்வி கற்பிப்பதற்காகச் சட்டமன்ற உறுப்பினர்கள் விவசாயிகளின் வீடுகளுக்கு வருகை தரும் நிகழ்வு அடங்கும்.
- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 03 ஆம் தேதியன்று ரிது சேவா கேந்திராக்களில் (விவசாயி சேவை மையங்கள்) பயிலரங்கங்கள் நடத்தப்படும்.
- இந்தத் திட்டம் நீர்ப் பாதுகாப்பு, தேவை அடிப்படையிலான சாகுபடி, வேளாண்

தொழில் நுட்ப ஒருங்கிணைப்பு, உணவு பதப்படுத்துதல் மற்றும் தொடர்ச்சியான அரசு ஆதரவு ஆகிய ஐந்து அம்ச வேளாண் உத்தியால் வழி நடத்தப் படுகிறது.

# முக்கிய தினங்கள்

## 2025 ஆம் ஆண்டு செந்நிறக் கோள் தினம்- நவம்பர் 28




- இது 1964 ஆம் ஆண்டு அமெரிக்க விண்கலமான மரைனர் 4 நாசாவால் விண்ணில் ஏவப் பட்டதை நினைவு கூர்கிறது.
- செவ்வாய்க் கிரகத்தின் அண்மை நிலைப் புகைப்படங்களை முதலில் எடுத்தது இந்த விண்கலமே ஆகும்.
- செவ்வாய்க் கிரகத்தில் பள்ளத்தாக்குகள், எரிமலைகள், பாலைவனங்கள், துருவப் பனிக் கட்டிகள் ஆகிய பல்வேறு நிலப்பரப்புகள் மற்றும் பருவங்கள் உள்ளன.
- செவ்வாய்க் கிரகத்தில் ஓராண்டு ஆனது 687 பூமி நாட்கள் நீடிக்கும்.
- செவ்வாய்க் கிரகத்தில் பெரும்பாலும் கார்பன் டை ஆக்சைடு நிரம்பிய ஒரு மெல்லிய வளிமண்டலம் உள்ளது.
- செவ்வாய்க் கிரகத்தில் உள்ள ஈர்ப்பு விசை பூமியின் ஈர்ப்பு விசையில் மூன்றில் ஒரு பங்கு ஆகும்.
- பூமியின் பாதி அளவு கொண்ட செவ்வாய்க் கிரகம் ஆனது அதன் மேற்பரப்பில் இரும்பு ஆக்சைடு இருப்பதால் சிவப்புக் கிரகம் (செந்நிறக் கோள்) என்று அழைக்கப்படுகிறது.

## பாலஸ்தீன மக்களுடனான சர்வதேச ஒற்றுமை தினம் 2025 - நவம்பர் 29

- இந்த நாள் 1977 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் நிறுவப் பட்டது.
- இது பாலஸ்தீனத்தைப் பிரிப்பதை பரிந்துரைக்கும் 1947 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபையின் தீர்மானத்தின் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

- இந்த நாள் பாலஸ்தீன மக்களின் உரிமைகள் மற்றும் சுய நிர்ணய உரிமைக்கான ஒரு தொடர்ச்சியான போராட்டத்தை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.




## இதரச் செய்திகள்

### ஆக்ஸ்போர்டின் ஆண்டின் சிறந்த சொல்லிற்கான தேர்வுப் பட்டியல் 2025




- ஆக்ஸ்போர்டு நிறுவனத்தின் ஆண்டின் சிறந்த சொல்லிற்கான 2025 ஆம் ஆண்டிற்கான தேர்வுப் பட்டியலில் Aura Farming, Biohack, மற்றும் Rage Bait ஆகிய

சொற்கள் இடம் பெற்றுள்ளன.

- ❖ Aura Farming என்பது ஈர்ப்பு மிக்க பொதுப் பிம்பத்தை வளர்ப்பது என்று பொருள்படும் ஒரு பெயர்ச்சொல் ஆகும்.
- ❖ Biohack என்பது வாழ்க்கை முறை, உணவு முறை, உடற்பயிற்சி அல்லது தொழில்நுட்பம் மூலம் உடல் அல்லது மன செயல்திறனை மேம்படுத்துவதைக் குறிக்கும் ஒரு வினைச் சொல் ஆகும்.
- ❖ Rage Bait என்பது கோபம் அல்லது சீற்றத்தைத் தூண்டுவதற்காக வேண்டுமென்றே வடிவமைக்கப்பட்ட இயங்கலை உள்ளடக்கத்தைக் குறிக்கும் ஒரு பெயர்ச்சொல் ஆகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★